
ஆப்பிரிக்க நாடுகள் வரிசை 8

# கிழக்கு ஆப்பிரிக்கா



'சோமலெ'

ப்பிரிக்க நாடுகள் வரிசை—8

# கிழக்கு ஆப்பிரிக்கா

'சோமலெ'

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை-1.

முதற்பதிப்பு—நவம்பர் 1968
உரிமை ஆசிரியர்க்கு.

விலை 75 காசு

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கிழக்கு ஆப்பிரிக்கா | .... | 5 |
| ஜான்சிபார் | .... | 7 |
| கீன்யா | .... | 18 |
| உகண்டா | .... | 31 |
| தங்ககனிா | .... | 39 |
| ருவாண்டா, புருண்டி | .... | 55 |

# ஆப்பிரிக்க நாடுகள் வரிசை

## (12 நூல்கள்)

1. *ஆப்பிரிக்கா—முன்னுரை*
2. *ஐக்கிய அரபுக் குடியரசு (எகிப்து)*
3. *எத்தியோப்பியா*
4. *தென் ஆப்பிரிக்கா*
5. *கானு*
6. *நைஜீரியா*
7. *சிர்ரா—லியோன்*
8. *கிழக்கு ஆப்பிரிக்கா*
9. *மே., தெ. மே. ஆப்பிரிக்கா*
10. *நடு ஆப்பிரிக்கா*
11. *வட., வ. மே. ஆப்பிரிக்கா*
12. *பிறநாடுகள்*

# கிழக்கு ஆப்பிரிக்கா

ஆப்பிரிக்காவின் உயிர்நாடியான பெரும் பகுதிகள் வட ஆப்பிரிக்காவின் வடகோடி, மேற்கு ஆப்பிரிக்காவில் சில குறிப்பிட்ட நாடுகள், தென் ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்க நாடுகள் என்பவை.

கிழக்கு ஆப்பிரிக்க நாடுகள் பொருளாதார நிலையிலும் அரசியல் நிலையிலும் பெருஞ் செல்வாக்குப் பெற்று வருகின்றன. பல துறைகளில் இந்த நாடுகள் முன்னேற்றம் பெற்றவண்ணமாக உள்ளன. கல்வி போக்குவரத்துத் துறைகளில் இவர்கள் அடைந்து வரும் வளர்ச்சி வியத்தகு அளவினது.

உலக நாடுகளுடன் கிழக்கு ஆப்பிரிக்கா கொண்டிருக்கும் உறவு, நாளும் பெருகி வருகிறது. பல துறைகளில் கிழக்கு ஆப்பிரிக்க நாடுகள் இணைந்து செயல்படுகின்றன. ஒரே நாடாக இவை ஓர் அரசின்கீழ் அமையும் நிலையும் உருவாகி வருகிறது.

புவியியல் வளம், பலவகை மக்கள், பொருளாதாரச் செழிப்பு, நிலையான ஆட்சி—இவற்றால் கிழக்கு ஆப்பிரிக்காவின் வருங்காலம் சிறப்பாக இருக்கும். இங்குள்ள நாடுகளாவன:

1. ஜான்சிபார்
2. கீன்யா
3. உகண்டா
4. தங்கனிகா
5. ருவாண்டா
6. புருண்டி

இவைகளைப்பற்றிய விவரங்களை அடுத்து வரும் பக்கங்களில் சுருக்கமாகக் கூறுவோம்,

1 FEB 1970



ஜான்சிபார் மங்கை

# ஜான்சிபார்

இயேசுப் பெருமகனார் பிறப்பதற்கு இரண்டு நூற்றாண்டுகள் முன்னதாக நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறுவோம்.

சீனாவின் பேரரசர் திருமுன், வாய்பொத்தி நின்றனர் சீன மக்கள். வாய்பொத்தியதற்குக் காரணம், அவர்கள் வாயிலிருந்து கெட்ட நாற்றம் பேரரசருக்குப் பரவிவிடக் கூடாது என்பதாகும். வாய் நாற்றத்தைப் போக்கக் கிராம்பைப் பயன்படுத்தும்முறை இதிலிருந்து உண்டாயிற்று.

பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில், உணவு சமைப்பதில் கிராம்பைப் பயன்படுத்தும் வழக்கம் பல நாடுகளில் ஏற்பட்டது.

இப்போது சிகரெட் செய்யும் சில தொழிற்சாலைகளில், புகையிலையில் கிராம்பைச் சேர்க்கிறார்கள்.

நறுமணப் பொருள்களிலும் மருந்துகளிலும் கிராம்பைக் கலக்கிறார்கள். வெற்றிலையோடும் தின்பண்டங்களோடும் இது பயன்படுத்தப்படுகிறது. மதுவகைகளிலும் இது பயனாகிறது.

மந்தத்தை நீக்கும் ஆற்றலும் உண்ட உணவைச் செரிக்கச் செய்யும் தன்மையும் கிராம்பிற்கு உண்டு.

வாதம், தலைவலி, பல்வலி முதலியவற்றை நீக்க, இது பெரிதும் உதவுகிறது.

கிராம்புக்கு இலவங்கம் என்றும் பெயர் உண்டு. கிராம்பை, நீரில் போட்டு, கெட்டியாகக் காய்ச்சினுல் இலவங்கத் தைலம் எடுக்கலாம்.

இலவங்கத் தைலம், காய்ச்சும்போது மஞ்சள் நிறமாய் இருக்கும். பிறகு அது படிப்படியாக மாறி பழுப்பு நிறமாக மாறும். மருத்துவர்கள், உடலில் அறுவை சிகிச்சை செய்யும்போது, குறிப்பிட்ட இடத்தில் உணர்ச்சி இல்லாமல் செய்துவிட இந்தத் தைலத்தை நோயாளிக்குத் தடவுகிருர்கள்.

கிராம்புச் செடி ஏழு ஆள் உயரம் (40 அடி) வரை வளர்கிறது. இலைகள் கனமாகவும் உறுதியாகவும் இருக்கின்றன. இது கொத்துக் கொத்தாகப் பூக்கத் தொடங்கி மலர்வதற்கு முன், இதன் அரும்புகளைப் பறித்துக் காயவைத்துப் பயன்படுத்துகிருர்கள்.

* * *

உலகின் கிராம்பு உற்பத்தியில் நூற்றுக்குத் தொன்னூறு பங்கு ஜான்சிபாரில் உற்பத்தியாகிறது.

1818இல் மொரிசியஸ் தீவிலிருந்து கிராம்புச் செடி ஜான்சிபாருக்குக் கொண்டுவரப்பட்டது.

அப்போது ஜான்சிபாரின் சுல்தானுக இருந்தவர் சைய்து சேதுபின் என்பவர். அவர் கிராம்பின் அருமையை உணர்ந்தார். அந்நாளில் ஜான்சிபார் நாடு முழுவதும் தென்னந் தோட்டங்கள் ஏராளமாய் இருந்தன. தென்னைமரம் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் மூன்று கிராம்புச் செடி வைக்கவேண்டுமென்று

அவர் கட்டளை பிறப்பித்தார். அவ்வாறு யாரேனும் கிராம்புச் செடி உண்டாக்காவிட்டால், அவர் தென்னை பயிரிட்டிருக்கும் நிலம் ஜான்சிபார் அரசினரால் பறிமுதல் செய்யப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

இந்த ஆணையின் விளைவாக ஜான்சிபார் நாடு கிராம்பு நாடாயிற்று. 1872இல் புயல் காற்று அடித்து கிராம்பு மரங்களில் மூன்றில் இரண்டு பகுதியை அழித்துவிட்டது. அதன் பிறகு நடப்பட்ட மரங்கள் இன்னும் பலன் தந்து வருகின்றன. கிராம்பு மரத்தின் ஆயுட்காலம் ஏறத்தாழ நூறாண்டாகும்.

ஜான்சிபார் தீவில் பத்து லட்சம் கிராம்பு மரங்களும் இதையடுத்த பெம்பாத் தீவில் முப்பது லட்சம் கிராம்பு மரங்களும் உள்ளன. இந்த இரண்டு தீவுகளிலுமிருந்து கிராம்பும், கிராம்பு மொட்டும், கிராம்பு எண்ணெய்யும் ஏற்றுமதி ஆகின்றன. கிராம்பை நான்கு ஐந்து நாட்களுக்கு ஓலைப் பாய்களில் உலரவைத்து, பிறகு அளவுக்குத் தகுந்தபடி தனித்தனியாகப் பொறுக்கி, தரம் பிரித்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்.

இந்த ஏற்றுமதியால் ஜான்சிபார் நாட்டுக்கு ஆண்டுதோறும் ஐந்துகோடி ரூபாய் வருவாய் கிடைக்கிறது.

கிராம்புத் தொழில் வளர்ச்சிக்காக ஜான்சிபார் அரசு, ஒரு கழகத்தை நிறுவியுள்ளது. இந்தியன் காப்பி போர்டு, இந்தியன் டீ போர்டு ஆகிய அமைப்புக்களைப் போல ஜான்சிபார் கிராம்புக் கழகம் செயல்பட்டு வருகிறது. உரம் வழங்குகிறது. மரங்களைச் சோதிக்கிறது, புதிய கன்றுகளை வழங்குகிறது, விற்பனையை ஒழுங்குபடுத்துகிறது, விலையை முடிவு

செய்கிறது, ஆராய்ச்சியை ஊக்குவிக்கிறது, கிராம்பி லிருந்து எண்ணெய் எடுக்க உதவுகிறது. வெளிநாடு களில் கிராம்பைப் பற்றி விளம்பரம் செய்கிறது.

ஜான்சிபாரில் உற்பத்தியாகும் கிராம்பில் ஏறத் தாழப் பாதி இந்தியாவில் செலவாகிறது. மற்றொரு பாதியில் இந்தோனேசியா ஒரு பாதியையும் உலகில் உள்ள ஏனைய நாடுகளெல்லாம் இன்னொரு பாதியை யும் வாங்குகின்றன.

1936ஆம் ஆண்டில் ஜான்சிபார் அரசு, அங்கு வாழ்ந்த இந்தியர்களுக்கு சில இன்னல்களை விளைத்தது. அதனால் காங்கிரசு மகாசபை ஜான்சிபார் இந்தியருக்கு உதவ சர்தார் வல்லபாய் பட்டேலைத் தலைவராகக் கொண்ட குழுவை நியமித்தது. அந்தக் குழு, சென்னைத் துறைமுகத்திலும் பம்பாய்த் துறைமுகத் திலும் மறியல் நடத்திற்று. ஜான்சிபார்க் கிராம்பைக் கப்பலிலிருந்து இறக்குவது தடைப்பட்டது. ஆறு மாதத்திற்குப் பிறகு ஜான்சிபார் அரசு அந்நாட்டு இந்தியர் நிலைபற்றிச் சர்தார் வல்லபாய் பட்டே லுடன் உடன்பாடு செய்துகொண்டது.

* * *

ஜான்சிபார் என்பது ஜான்சிபார், பெம்பா என்னும் இரு தீவுகளும் சேர்ந்தது.

ஜான்சிபார்த் தீவின் நீளம் 54 மைல். அகலம் 24 மைல். பரப்பளவு 640 சதுரமைல். முன்னாள் புதுக் கோட்டைத் தனி அரசின் பரப்பைவிடக் குறைவு. இந்திய நாட்டிலிருந்து, இராமேசுவரம் தீவு தனித்திருப் பது போல, ஜான்சிபார்த் தீவு ஆப்பிரிக்க நாட்டி லிருந்தும் தனித்திருக்கிறது. இடையேயுள்ள கடலின்

தொலைவு 30 மைல். தனுஷ்கோடிக்கும் இலங்கைக் கரைக்குமுள்ள தொலைவு 23 மைல்.

ஜான்சிபார்த் தீவுக்கு வடகிழக்கே 35 மைல் தொலைவில் பெம்பாத் தீவு உள்ளது. இதன் பரப்பு 380 சதுர மைல். இந்தத் தீவில் ஒரு விமான நிலையம் இருக்கிறது. 'பெம்பா' என்னும் சொல் 'பச்சைத் தீவு' என்று பொருள்படும். ஜான்சிபாரின் தலை நகரத்தின் பெயரும் ஜான்சிபார் என்பதே.

**பல்சுவை**

கடலின் தட்பத்தால் தணிக்கப்பட்ட வெப்பம், ஜான்சிபாரின் செழிப்பின் அடிப்படையாக இருக்கிறது. மூன்றரை லட்சம் மக்கள் இங்கு வாழ்கிறார்கள். மிகப் பெரும்பான்மையோர் ஆப்பிரிக்கரே, வெளிநாட்டவரில் குறிப்பிடத்தக்கவர் அராபியரும் இந்தியரும் பாக்கிஸ்தானியரும் ஆவர். அராபியர் தொன்றுதொட்டு இப்பகுதியில் படகோட்டி வருபவர்கள். வேலைப்பாடுள்ள சிறு படகுகளையும் அவர்கள் செய்கிறார்கள். பாக்கிஸ்தானியர் சிறு வாணிகங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தியர் தொகை 20,000 இருக்கும். இவர்களில் அரசின் அலுவலகங்களில் வேலை பார்ப்பவர்கள் ஒரு சிறு பகுதியினர். பித்தளைக் கதவுகள் செய்பவர் ஒரு சிலர். யானைத் தந்தத்தில் பொருள்கள் செய்யும் கலைஞர் சிலர், வெள்ளி வேலை ஆசாரிகள் பலர்.

கிழக்கு ஆப்பிரிக்காவில் பெரு வணிகராய் உள்ள இந்தியர்கள் ஜான்சிபார்த் துறைமுகப் பகுதிகளில் கிராம்பு ஏற்றுமதிக்காக அலுவலகங்கள் வைத்துக் கொண்டிருக்கின்றனர்.



ஜான்சிபார் ஆடவர்

இங்குள்ள ஆப்பிரிக்கரில், மீனவர் மிகுதி. கடல் சூழ்ந்திருப்பதால் இது இயல்பே. ஜான்சிபார் மீனவர் உழவுத் தொழிலிலும் உள்ளனர். நண்டு மீனின் தோலை ஏற்றுமதி செய்து பொருளீட்டுகின்றனர். இவை நீரில் நீந்தினாலும் இவற்றின் தோல்கள் ஆகாயத்தில் பறக்கின்றன.

ஜான்சிபார் நகரிலும் சேக்சேக்கிச் சிற்றூரிலும் விமான நிலையங்கள் உள்ளன.

இங்கு வழங்கும் மொழிகள் ஸ்வாஹிலி, ஆங்கிலம், அரபு, குஜராத்தி.

அரபு மொழி பயிலவும் இஸ்லாமிய சமயத்தைப் பற்றிக் கற்றுக்கொள்ளவும் ஜான்சிபார் நகரில் ஒரு கல்வி நிலையம் இருக்கிறது. அரசினர்ப் பள்ளிகள் ஸ்வாஹிலி மொழியிலேயே பாடங்களைக் கற்பிக்கின்றன. குஜராத்தியர், தங்கள் மொழி வாயிலாகக் கல்வி புகட்டும் பள்ளிக்கூடங்களை நடத்தி வருகிறார்கள். கல்லூரிப் படிப்புக்குக் கிழக்கு ஆப்பிரிக்கப் பல்கலைக் கழகத்துக்கும் . இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்துக்கும் செல்லுவது இங்கு பெருமையாகக் கருதப்படுகிறது.

ஜான்சிபாரின் இறக்குமதி: அரிசி, துணி, பெட்ரோல், சணல்.

ஏற்றுமதி: கிராம்பு, நண்டுத்தோல், மீன், தென்னைப் பொருள்கள்.

ஒரு குறிப்பிட்ட பொருளை மட்டும் பெரிய அளவில் உற்பத்தி செய்யும் நாடுகள், அந்தப் பொருள்களுக்குப் போட்டிப் பொருள் ஏற்பட்டுவிடும் என்றும் போக்குவரத்தில் ஏதாவது சிக்கல் ஏற்படும் என்

றும் கவலைப்படுகின்றன. அமெரிக்காவில் செயற்கை ரப்பர் கண்டு பிடிக்கப்பட்டால் மலேசியாவின் பொருளாதாரம் ஓரளவு ஆட்டங்கண்டு விடுகிறது. எங்கேயாவது போர் மூண்டு, கப்பல் போக்குவரத்துக்கு ஊறு நேர்ந்தால், பிரேசில் நாட்டின் பொருளாதார அடிப்படையே தகர்ந்துவிடுகிறது.

எனவே, கிராம்பை நம்பாதே என்ற இயக்கம் ஜான்சிபாரில் பரவி இருக்கிறது. மிளகாய்ச் செடியும் எலுமிச்சைக்கன்றும் பயிரிடுவதற்கு அரசினர் உதவி செய்கிருர்கள். எலுமிச்சம்பழச்சாறு ரொடீசியாவுக்கும் எலுமிச்சை எண்ணெய் இங்கிலாந்துக்கும் ஏற்றுமதியாகின்றன. உள்நாட்டுத் தேவைக்கு வேண்டிய அளவு நெல்லும் காப்பியும் கொக்கோவும் பயிரிட்டுக் கொள்கின்றனர்.

**ஜான்சிபாரில் இருப்பவை:** கடலோரத்தில் நீண்ட மணற்பரப்பு, பனை ஈச்சமரங்கள், கன்னங்கரேல் எனக் காட்சி தரும் மாமரங்கள், பளபளக்கும் கிராம்புத் தோட்டங்கள், பச்சைப் பசேறென உள்ள பத்தைகள் குறுகலான தெருக்கள், ஆகாக்கானின் வள்ளன்மையால் ஏற்பட்ட அற நிறுவனங்கள்.

**இல்லாதது :** இரயில்.

**மக்களின் பொழுது போக்கு :** நிலா நாளில் கடல் நீராடுவது.

**ஜான்சிபாரின் பெருமை:** ஆப்பிரிக்காவிலேயே மிகவும் தெளிவானதும் சுவையானதும் ஆகிய குடி தண்ணீர் இத்தீவில்தான் கிடைக்கிறது. இது கடல் நடுவே, இராமநாதபுர மாவட்டத்திலுள்ள நல்ல தண்ணீர்த் தீவின் குடிநீரை நினைவுபடுத்துகிறது.

**ஜான்சிபாரின் சிறுமை:** இங்கு கொசு மிகுதி. இத ஞல் நீண்ட உடையையும் உயர்ந்த பூட்ஸ்களையும் அணிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

**வரலாறு**

அந்தமான் தீவு, அந்தமான் நிக்கோபார் என்ற இருபெரும் தீவுகளைக் கொண்டதாக இருப்பதுபோல ஜான்சிபார், பெம்பா என்ற இரு தீவுகள் உள்ளன.

இத்தீவுகள் கடற்பாதையில் அமைந்திருப்பதால் ஆசிய அராபிய வணிகர்கள் ஆப்பிரிக்காவை அறி வதற்கு முன்னரே, இத்தீவை அறிந்திருந்தனர். இங் குள்ள தங்கத்தையும் தந்தத்தையும் பெற, இந்திய சீன, அரபு வணிகக் கப்பல்கள் கி மு. ஏழாம் நூற்ருண் டிலேயே வந்து சென்றன. அக்காலத்தில் கடற்பயணம் என்பது இந்நாளிற்போல ஒரு துறைமுகத்தில் வந்து தங்குவதும் ஐந்து அல்லது ஆறு நாட்களில் மீண்டும் புறப்படுவதும் அன்று. வடகிழக்குக் காற்று அடிக்கும் பருவத்தில் வந்து சேர்ந்து தென்மேற்குக் காற்று காலத்தில் புறப்பட வேண்டும்.

நாடு பிடிக்கும் பந்தயத்தில் ஐரோப்பாவில் முதன் மையாக இருந்தவர்கள் போர்த்துக்கீசியர். அந்நாட் டவரான வாஸ்கோடகாமா, கள்ளிக்கோட்டைக்கு வரும் வழியில் இங்கு இறங்கினர். 1498இல் நிகழ்ந்த நிகழ்ச்சி இது.


அன்றுமுதல் சரியாக 200 ஆண்டுகள் அரபுநாட்டு வணிகர்க்கும் போர்த்துக்கீசிய வணிகர்க்கும் அத்தீவு களிலும் கிழக்கு ஆப்பிரிக்காவின் கடற்கரைப் பகுதிகளி லும் ஆதிக்கப் போராட்டம் நடைபெற்றது; அப் போராட்டம் அரபு நாட்டினர்க்கு வெற்றியாக முடிந்

தது, மொம்பாசாவிலிருந்து போர்த்துக்கீசியர் வெளி யேற்றப்பட்டனர். அராபியர் ஆட்சி இத்தீவுகளிலும் ஏற்பட்டது. 1822இல் இரு தீவுகளும் இணைக்கப்பட்டு, தனித்தனி ஆட்சி நீங்கி, அராபிய சுல்தான் ஒருவரின் ஆட்சி உருவாயிற்று.

1882இல் சையது செய்டு என்ற சுல்தான் தன் தலை நகரை ஜான்சிபார் நகரத்தில் அமைத்துக்கொண்டார். அதுமுதல் ஜான்சிபார் நகரம் கிழக்கு ஆப்பிரிக்காவின் முக்கிய நகரங்களுள் ஒன்றாக விளங்கிற்று. ஜான்சிபாரில் பாட்டுப் பாடினால் கிழக்கு ஆப்பிரிக்கா முழுவதும் தாளம் போடுவார்கள் என்பது பழமொழி.

அடிமை வியாபாரம் 18, 19ஆம் நூற்றாண்டுகளில் அளவுகடந்து நிலவியது. அதை அடியோடு ஒழிக்க இயலாவிட்டாலும் கட்டுப்படுத்த வேண்டுமென்று சுல்தான் ஆசைப்பட்டார். அதனால் அவர் ஆங்கிலேயருடன் ஓர் உடன்பாடு செய்துகொண்டார். அவருக்குப்பின் பட்டத்துக்கு வந்த சையது மஜீத் பின் செய்த் என்ற சுல்தான் ஆங்கிலேயரின் அன்பு கெழுமிய நண்பராய் அருமைத்தோழராய் உற்றார் உறவினராய் இருந்தார். இதனால் ஜான்சிபாரின் சுதந்திரத்தை 1862ல் ஆங்கிலேயர் ஏற்றனர். ஆனால் அவருக்குப் பின்வந்த சுல்தான்கள் படிப்படியாகத் தங்கள் அதிகாரத்தை ஆங்கிலேயருக்கு விட்டுக் கொடுத்தனர்.

சில நாடுகளில் அரசாங்கத்தை அமெரிக்கத் தூதுவர் மறைமுகமாக நடத்திவருவது உண்டு. சில குடும்பங்களை ஆட்டிவைக்கும் செல்வாக்குச் சில பெண்களுக்கு உண்டு. தங்கள் அழகைக் கருவியாகக் கொண்டு போர் வீரர்களையும் அரசர்களையும் தழுவி



ஜான்சிபார் நகரம்—ஒரு காட்சி

பேரரசுகளை ஆட்டிப் படைத்தவர்களைப் பற்றியும் வரலாற்று ஏடுகளில் படிக்கிறோம்,

ஜான்சிபாரின் ஆட்சியும் இவ்வாறு இன்யாவாழ் ஆங்கிலேய ஆடவர்—பெண்டிரின் கையில் இருந்தது. முடிசூட்டிக்கொள்ளும் உரிமை மட்டும் ஜான்சிபார் சுல்தானுக்கு இருந்தது.

1966ல் ஜான்சிபார் சுதந்திரமான குடியரசாயிற்று.

# கீன்யா

கடலோரமாகவும் கேந்திரமாகவும் அமைந்திருப்பது, சிறந்த தட்பவெப்ப நிலை, தொழில்வளர்ச்சி, வேளாண்மைப் பெருக்கம், அறிவுடைச் சான்றோர்களின் ஆட்சி, ஆங்கில மொழியின் செல்வாக்கு, கறுப்பர்களின் முன்னேற்றம் இவற்றின் இணைப்பே கீன்யா.

ஒரு நூற்றாண்டுக்குமேல் ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து, கீன்யா பொன்முட்டையிடும் வாத்தாக ஆங்கிலேயருக்கு உதவி வந்தது. 1963 டிசம்பர் 12ல் அது விடுதலை பெற்றது.

## அமைப்பு

வடக்கே சூடானும் எத்தியோப்பியாவும், கிழக்கே சோமாலியாவும் இந்தியப் பெருங்கடலும், தெற்கே ஜாம்பியாவும் டான்ஜேனியாவும் மேற்கே விக்டோரியா ஏரியும் உகண்டாவும் ஆகிய எல்லைகளையுடையது கீன்யா, இதன் பரப்பு 2,25,000 சதுர மைல். அதாவது தமிழ்நாடு, கேரளம், மைசூர், ஆந்திர மாநிலங்களின் மொத்தப் பரப்புக்குச் சமமானது.

## மக்கள்

இந்நாட்டின் மக்கள் தொகை ஏறத்தாழ ஒரு கோடி. இதில் 95,00,000 பேர் ஆப்பிரிக்கர். இந்தியரும் பாக்கிஸ்தானியரும் 2,00,000. ஐரோப்பியர் 69,000. அராபியர் 36,000.

**தலைநகர்**

நாட்டின் தலைநகர் நைரோபி. இந்நகரின் மக்கள் தொகை 1960ல் மூன்று லட்சம். 1970ல் இது பத்து லட்சம் ஆகிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு நிகழும் வாணிகம், நாற்பது லட்சம் மக்கள் வாழும் பம்பாய் நகரத்தின் அளவாகும். திரைப்பட மாளிகைகளும் சிற்றுண்டிவிடுதிகளும் கடைகளும் பம்பாயைப்போலவே பெரும்பாலும் குஜராத்தியர்களாலும் போரா சமூகத்தாராலும் நடத்தப்படுகின்றன. வரிசை வரிசையாக உள்ள அந்த வணிகநிலையங்களின் பெயர்ப் பலகைகளிலிருந்து, அவை ஒரு பட்டேல், ஒரு ஷா, ஒரு நைனிசிக்கிபி, ஒரு மனுபாய் அல்லது ஒரு ரமண பாயின் கடை என்பது தெரிகிறது.

கீன்யா மட்டுமின்றி கிழக்கு ஆப்பிரிக்காவின் மூன்று கோடி மக்களும் சந்திக்கும் பெருநகரமாகவும் ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றின் இரயில் பாதைகளையும் ஆகாயவிமானப் போக்குவரத்தையும் இணைக்கும் இடமாகவும் நைரோபி விளங்குகிறது.

ஒவ்வொன்றும் ஒரு கோடி ரூபாய் முதலீடு உள்ள உணவு விடுதிகள், விண்ணை முட்டும் அலுவலகக் கட்டிடங்கள், ஏராளமான புறநகர்கள், பொழுது போக்கு மன்றங்கள், ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட கார்கள். சிங்கம் முதல் காண்டாமிருகங்கள் ஈராக உள்ள ஒரு புகழ்பெற்ற பூங்கா—இவைகளையுடையது நைரோபி.

வெள்ளையர் ஆதிக்கமில்லாத ஆப்பிரிக்க நாடுகளில் நைரோபி நகரம்தான் மிகப் பெரிது, சிறந்தது என்பது உலகெங்கும் பரவிவரும் கருத்தாகும்.

வேட்டையாடவும் ஆலிவுட் என்னும் திரைப்பட நகரில் உருவாகும் திரைப்படங்களுக்குச் சில காட்சிகளை எடுக்கவும் அமெரிக்கர் கூட்டம் கூட்டமாக இந்நகருக்கு வருகிறார்கள்.

வெளிநாட்டாரை இங்கே ஈர்ப்பது இந்த நகரின் இயற்கை எழில். உதகையைப்போன்று இந்நகரமும் ஏறத்தாழ 7,000 அடி உயரத்தில் உளது.

கீன்யாவின் பெரும்பகுதியில் ஏப்ரல் முதல் ஜூன் வரையும், அக்டோபர் முதல் டிசம்பர் வரையும் இரு கட்டங்களாக மழைக்காலம் அமைந்திருக்கிறது.

**துறைமுகம்**

கீன்யாவின் துறைமுகம் மொம்பாசா என்னும் நகரில் இருக்கிறது. இந்நகர் இந்நாட்டின் தென் கிழக்குக் கோடியில் ஒரு தீவில் அமைந்திருக்கிறது. இந்த நாட்டின் மக்கள் தொகை மூன்று லட்சம். சிங்கப்பூரைப்போலவே இந்தத் தீவும் ஒரு பாலத்தால் இணைக்கப்பட்டிருக்கிறது,

இந்தத் துறைமுகத்தில் புத்தம் புதிய பெரிய கப்பல்களும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் அராபியர் பயன்படுத்திய சின்னஞ்சிறு படகுகளும் அடுத்தடுத்து நிற்கக் காணலாம். பதினாறும் நூற்றாண்டில் போர்த்துக்கீசியர் கட்டிய ஒரு கோட்டையும் இருக்கிறது.

**ஆட்சி**

கீன்யா 1963ல் சுதந்திரம் பெற்றது. 1964ல் இது ஒரு குடியரசு நாடாயிற்று. குடியரசின் தலைவர் ஜோமோ கின்யாட்டா என்பவர் மகாத்மா காந்தி

யடிகளைப்போல ஆப்பிரிக்க மக்கள் அனைவராலும் மதிக்கப்படும் பெரும் தலைவராவார்.

இந்நாட்டில் ஏழு மாநிலங்கள் உள்ளன. கல்வி, மருத்துவம், சிறிய சாலைகள் ஆகிய மூன்று துறைகளில் மட்டும் மாநிலங்களுக்கு அதிகாரம் உண்டு. ஏனைய உரிமை அனைத்தும் மத்திய அரசினருக்கே உண்டு. இரு அவைகள் கொண்ட ஒரு பாராளுமன்றமும், குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் அமைச்சரவையும் உள்ளன.

**நாட்டுணர்ச்சி**

ஆழிசூழ் உலகமெல்லாம் தங்கள் ஆட்சிக்குள் இருந்தபோது, ஆங்கிலேயர் அவற்றுள் ஒருசில நாடுகளைப்பற்றி மட்டும் எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தனர். அவற்றுள் ஒன்று கீன்யா. ஆங்கிலேயர், வளமிக்க இந்த நாட்டில் குடியேறித் தாங்களும் பயன் அடைந்தனர். இந்த நாட்டின் செல்வச் செழிப்புக்கும் இன்றைய ஏற்றத்துக்கும் வித்திட்டனர்.

இந்தச் சூழலில் ஆப்பிரிக்கரின் உணர்ச்சிக்கும் ஆங்கிலேயர் வித்திட்டனர். ஆப்பிரிக்கா ஆப்பிரிக்கருக்கே என்ற இயக்கம் கீன்யாவில்தான் பிறந்தது.

இந்த இயக்கம் 1950ல் மாவ் மாவ் புரட்சி என்ற பெயரில் பயங்கரமான ஒரு கிளர்ச்சியாக ஆங்கிலேயர் வாழ்ந்த பகுதிகளில் ஏற்பட்டது. அதன் பிறகு வேளாண்மை செய்வதற்கு ஆப்பிரிக்கர்களுக்கு நிலம் வழங்கவும் அவர்களுக்கும் சில வீடுகளைக் கட்டிக் கொடுக்கவும் ஆங்கிலேயர் முன்வந்தனர்.

பல்வேறு இனத்தவர்களை மோதவிடவும் ஆங்கிலேயர் திட்டமிட்டனர். ஆப்பிரிக்கப் பழங்குடி மக்க

ளுக்குள்ளேயே நிலவிய பிளவுகளைப் பயன்படுத்திக் கொண்டு பிரித்தாளும் சூழ்ச்சியால் தங்களுடைய பொருளாதாரப் பிடிப்பைத் தொடர்ந்து வைத்துக் கொள்ளலாம் என்றும் ஆங்கிலேயர் கனவு கண்டனர். கீன்யாட்டாவின் ஒப்பற்ற தலைமையில், கீன்யா ஆப்பிரிக்கர் அனைவரும் ஒன்றுபட்டனர். எனவே எவ்வித நிபந்தனையுமின்றி, கீன்யாவைவிட்டு ஆங்கி லேயர் வெளியேற வேண்டியதாயிற்று.

உரிமை பெற்ற கீன்யா அரசு, தொடர்ந்து தொழில் வளர்ச்சிபெற ஆவனசெய்து வந்திருக்கிறது. வெளியார்மூலதனம் போடுவதை அவர்கள் தடுக்க வில்லை. வெளிநாடுகள் கேலி செய்யும்படியாக எந்த வகையிலும் அவர்கள் நடந்துகொள்ளவில்லை.

**பொருளாதார நிலை**

கீன்யாவின் செல்வச் செழிப்புள்ளபகுதி, உயர்ந்த மலைப்பகுதியாகும். இப்பகுதி 7,000 அடிக்குமேல் 14,500 அடிவரை உள்ளது. இந்தியாவில் இவ்வளவு உயரமான இடங்கள் இமயமலைத் தொடரில் மட்டுமே இருக்கின்றன.

மிக உயர்ந்த பகுதியில் ஆண்டு முழுவதும், பனிக் கட்டி அப்பகுதியை மறைத்துக்கொண்டிருக்கிறது 10,000 அடி உயரத்தில் மரங்கள் ஓங்கி வளர்ந்துள்ளன.

இதைவிடக் குறைவான உயரமுள்ள மலைப்பகுதி களில் ஐரோப்பியர் இரயில் பாதை போட்டும் வாழு வதற்குச் சிறு நகரம் அமைத்துக்கொண்டும் தேயிலை, இலவம் பஞ்சு, காப்பி முதலியவற்றையும் வாட்டில் என்னும் பட்டையையும் பயிரிட்டிருக்கின்றனர்.

பண்ணைகளை வைத்துக் கால்நடைகளை வளர்ப்பவர் சிலர். கம்பளி நெசவு செய்வோர் சிலர். மாவு அறைக்கும் ஆலைகள் நடத்துபவர் வேறு சிலர். அரசினரின் ஊழியராய் இருப்பவர் இன்னும் சிலர். இந்த ஐரோப்பியரில் ஒரு சிலரே ஆங்கிலேயர். ஏனையோர் பல ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்தவர்கள். யூதர் கொடுமையாக நடத்தப்பட்டபோது ஜெர்மனியிலிருந்து ஓடிவந்த யூதர், ரஷ்யப் புரட்சியின் விளைவாய் அந்த நாட்டிலிருந்து தப்பிய ரஷ்யர், எத்தியோப்பியாவில் முசோலினி ஆட்சி ஏற்பட்டபோது அங்கிருந்து வெளியேறிய இத்தாலியர் — இவ்வாறு பலருக்குத் தஞ்சம் கொடுத்தது கீன்யா. இவர்கள் அனைவரும் கீன்யாவின் மலைநாட்டைத் தம் உழைப்பால் மேலும் வளப்படுத்தி அங்கேயே நிலைத்துவிட்டனர்.

நைரோபியின் சுற்று வட்டத்தில் காப்பித் தோட்டங்கள் ஏராளமாக உள்ளன. கீன்யா மலைச்சரிவில் ஒவ்வொரு ஆண்டிலும் ஒன்பது மாதங்களுக்குக் காப்பிக்கொட்டை எடுக்கப்படுகிறது. இங்கு விளையும் காப்பி, தரத்தில் சிறந்த அரபிகா வகையாகும்.

கடலோரத்திலும் நியான்ஸா மாநிலத்துக் காடுகளிலும், ஐரோப்பியரும் ஆப்பிரிக்கரும் இலவம் பஞ்சு பயிரிட்டு வருகின்றனர்.

தேயிலை பயிரிடுவதும் கீன்யாவின் பெரிய தொழிலாகும். தேயிலைத் தோட்டங்களும் தேயிலைத் தொழிற்சாலைகளும் உள்ளன.

மலைப்பகுதிகளில் உற்பத்தியாகும் ஒருவகை மரத்திற்கு வாட்டில் என்று பெயர். தமிழில் இதைச் சீமை வேல் என்று கூறலாம். இது கீன்யாவில் மிகுதி. மணற்பாங்கான இடங்களில் பனி மிகுதியாய்ப் பெய்யா

விட்டால் இது நன்கு வளர்கிறது. நாற்றுப்பாவி நட்டுப் பயிர் செய்யும் மரங்கள் நல்ல பலன் தருகின்றன. இந்த மரப்பட்டை, தோல் பதனிட மிகவும் உதவுகிறது. பட்டையிலிருந்து பிழியும் சாறும் தோல் பதனிடப் பயன்படுகிறது.

இம்மரத்தின் பட்டை, சுரங்கக் குழிகளைப் பாதுகாக்கவும், அடுப்புக்கரி செய்யவும் ஏற்றது. பட்டையின் சக்கையைக் கொண்டு காகிதமும் அட்டையும் செய்யலாம். இம்மரத்தின் பூ, பல வழிகளில் பயன்படுகிறது.

தோல் தொழிலுக்கு இந்தியா பெரியஅளவில் இப்பட்டையை இறக்குமதி செய்தது. தென் ஆப்பிரிக்காவுடன் வணிக உறவு கைவிடப்பட்டிருப்பதால் இந்தியாவின் வாட்டில் பட்டைத் தேவையில் 100க்கு 90 பங்கு, கீன்யாவிலிருந்து வருகிறது.

நியான்சா மாநிலத்தில் சோளமும் கரும்பும் பருத்தியும் பயிரிடப்படுகின்றன. இங்கு வாழும் ஆப்பிரிக்கர் எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெற்றுறுள்ளனர். இப்பகுதியில் குறிப்பான நகரம் கிசுமு என்பது. கடல்போன்ற பரப்புள்ள விக்டோரியா ஏரியின் கரையில் இருப்பதால் இந்நகர் ஒரு துறைமுகப் பட்டினமாயும் மிளிர்கிறது. இந்த ஏரியின் வழியாக கிசுமுவிலிருந்து உகண்டா, தங்கனிகா நாடுகளுக்குக் கப்பல் போக்குவரத்து நாள்தோறும் நடைபெறுகிறது.

**ஆப்பிரிக்கர்**

கீன்யாவில் வாழும் ஆப்பிரிக்கர் கிக்கியூ, மசாய் போன்ற பல பிரிவினர். இவர்களில் சிலர் கிறித்தவச் சமயத்தில் சேர்ந்துள்ளனர். சிலர் மேலைநாட்டு நாகரிகத்தில் மூழ்கியுள்ளனர்.


கிக்கியூ இனத்தவர் எண்ணிக்கையாலும் வரலாற்றாலும் முக்கியமான கூட்டமாவர். கிழக்கு ஆப்பிரிக்கா வெங்குமுள்ள ஐரோப்பியர்களை வெளியேற்றுவதற்கான சதித்திட்டங்களை இவர்கள் நிறைவேற்றினர். இதனால் ஐரோப்பியர் இவர்களைப் பழிவாங்கினர். இவர்களுடைய குடியிருப்புக்களை முள்கம்பி அடைத்து வைத்தனர். இவர்கள் வெளியே வருவதும் தடை செய்யப்பட்டது.

ஆப்பிரிக்க மக்களுக்கு இசையில் ஈடுபாடு மிகுதி. அவர்களுடைய மூச்சுடன் பாட்டு ஒன்றியிருப்பதாகச் சொல்லலாம். குழந்தைகள்கூட இசைத்தட்டிலே பாட்டைக் கேட்டால் அதில் மயங்கி, தாளம் தவருது கைகொட்டுவர். இசைத்தட்டு விற்கும் கடைகளிலும் இசை ஒலி கேட்கும் இடங்களிலும் ஆப்பிரிக்கர் கூடுவதைக் காணும்போது அவர்களிடம் உடை குறைவாக இருந்தாலும் கலைமிகுதியாய் இருக்கிறது என்ற முடிவுக்குத்தான் வருகிறோம்.

நாட்டுப் பாடல்களைத்தான், ஆப்பிரிக்கர் மிகவும் சுவைக்கிறார்கள். 'கய்ட்டர்' என்னும் ஒருவகை இசைக் கருவியை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். இது சாரங்கி போன்றது.

இசைத் தட்டு விற்கும் கடைக்குச் சென்றால் கையில் இருக்கும் காசுக்கு ஏதாவது ஓர் இசைத் தட்டை விலைக்கு வாங்கிவிடுவது ஏழை ஆப்பிரிக்கரிடமும் நிலவும் வழக்கமாகும். மேலை நாட்டு இசைக் கருவிகளும் பண்களும் மெல்ல மெல்ல, கிழக்கு ஆப்பிரிக்காவில் பரவி வருகின்றன.

ஆப்பிரிக்கர் இசைப்பள்ளிக்கூடங்களிலோ அல்லது ஆசிரியர் வாயிலாகவோ முறைப்படி படிப்பதில்லை அவர்கள் இயல்பாகப் பாடுகிறார்கள். தங்களை மகிழ்



ஜான்கிபார்—கிராம்புச் செடி



ஜான்சிபார்—கிராம்புகளைப் வகைப் படுத்தும் காட்சி

வித்துக் கொள்ளவே பாடுகிறார்கள், பிறருடைய பாராட்டைப் பெறுவதற்காக அன்று.

கிக்கியூ இனத்தவரிடையே சில வேடிக்கையான பழக்கங்களும் உள்ளன. காதலிக்கத் தொடங்குமுன் இருபது பவுன் கட்டணம் செலுத்த வேண்டும். திருமணத்தின்போது பெண்ணின் தகப்பனுக்குப் பன்னிரண்டு எருதுகளையும் தொன்னூறு ஆடுகளையும் கொடுக்க வேண்டும்.

பெண்களின் பால் உணர்ச்சியைக் குறைப்பதற்கான ஓர் அறுவைச் சிகிச்சை, சிறுவயதில் செய்யப்படுகிறது. தொன்று தொட்டு இருந்துவரும் இப் பழக்கத்தை, கிறித்தவப் பாதிரிமார்களாலும் தடை செய்ய இயலவில்லை.

**இந்தியர்**

கிழக்கு ஆப்பிரிக்காவில் இந்தியர் வாழ்வது போலவே இந்தியாவிலும் கிழக்கு ஆப்பிரிக்கர் சிலர் உள்ளனர்.

*1459* முதல் *1474* வரை வங்காளத்தை ஆண்ட ஒரு முஸ்லிம் மன்னர், ஆப்பிரிக்க அடிமைகள் *8,000* பேரை இந்தியாவுக்குக் கொண்டுவந்தார். அவர்களுக்குப் பல சலுகைகளை வழங்கினார். அவருக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த ஃபாத்ஷா என்பவரை அந்த நீக்ரோ அடிமைகள் கொலை செய்து, தங்களுள் ஒருவரை அரசராக்கினர். பதினேழு ஆண்டுகள் வங்காளம் நீக்ரோக்களுடைய ஆட்சியில் இருந்தது. அதன் பிறகு வேறு ஒருவர் பட்டத்திற்கு வந்து நீக்ரோக்களை வங்க நாட்டிலிருந்தும் நாடுகடத்தினார். நாடு கடத்தப் பட்ட வங்க நீக்ரோக்களின் வழித் தோன்றல்கள் சித்திகள் என்ற பெயரில் இன்று குஜராத் மாநிலத்தில் வாழ்கின்றனர்.

கீன்யாவாழ் இந்தியர் பெரும்பாலும் குஜராத், பஞ்சாப், கோவா ஆகிய பகுதிகளிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்றவர்களும் அவர்களுடைய மக்களும் பேரப்பிள்ளைகளுமாவர். இரயில் பாதை போடவும் பஸ்களை ஓட்டவும் இவர்கள் கப்பல் கப்பலாகஇந்தியாவிலிருந்து சென்றனர். பிறகு பொற்கொல்லர்களும் சிறு வணிகர்களும் சென்றனர்.

கீன்யா இந்தியர் அனைவரும் நகர்ப்புறங்களிலேயே வாழ்கின்றனர். நகரங்களில் இவர்களுக்குச் சொந்தமான வீடுகள் பல்லாயிரக்கணக்கில் உள்ளன. சிறு கடைகள் யாவும் இவர்களுடைய தனிஉரிமை,

பொருள் ஈட்டுவது தவிர வேறு எதிலும் இவர்களுக்கு ஆர்வமில்லை. இதனால் இவர்களுக்கு, தக்க தலைவர்கள் இல்லை. ஆப்பிரிக்க மக்களுடைய நல்லெண்ணத்தை இவர்கள் பெறவே இல்லை.

தலைவர் கீன்யாட்டா அரசியலில் இந்தியாவுடன் நட்புக் கொண்டிருந்தபோதிலும் அந்த நட்பைப் பயன்படுத்திக்கொள்ளக் கீன்யா இந்தியர் தவறிவிட்டனர். கீன்யா குடியுரிமை பெற அங்கு வாழும் இந்தியரில் நான்கில் ஒரு பகுதியினர்கூட முன்வரவில்லை. பெருஞ் செல்வர்கள் இந்தியாவுக்குக் குடியேறிவிட்டனர். கீன்யாத் தலைவர்களும்—ஏன் ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றிலும் பர்மாவிலும் உள்ள அரசியல் தலைவர்களும்—உலக அரசியலில் செல்வாக்குப் பெற இந்தியத் தலைவர்களுடன் நட்பும், தம்நாட்டு மக்களின் உணர்ச்சியை நிறைவேற்ற அங்கு வாழும் இந்தியர்க்குக் கேடு விளைவிப்பதைப் பழக்கமாகவும் கொண்டுள்ளனர். அரசியல் தலைவர்களுக்கு இரட்டை நாக்கு உடன் பிறந்தது போலும்!

**பல்சுவை**

கீன்யாவில் வளர்ச்சியடைந்துள்ள ஒரு பெரிய தொழில் வேட்டையாடுதல்.

காண்டாமிருகம் என்னும் உயிரினம் இங்கு மிகுதி. சில பொருள்களில் சேர்ப்பதற்காக இதன் கொம்பு இந்தியாவுக்கு வரவழைக்கப்படுகிறது; ஒரு கிலோவின் விலை ரூபாய் இருநூறு.

கீன்யாவில் யானைகள் ஏராளம். தென்கீன்யாவில் மட்டும் 20,000 யானைகள் உள்ளன. யானைகளை வைத்துத் தீனி போட முடியவில்லை. ஆகையால் யானைகளைக் கொல்லவும் யானைகளுக்குக் குடும்பக் கட்டுப்பாடு செய்யவும் திட்டமிட்டிருக்கிறார்கள்.

கீன்யாவின் மற்றொரு செல்வம் சிங்கம். சிங்க வேட்டைக்கு வெள்ளைக்காரர் கூட்டம் கூட்டமாகப் போகும்போது அவர்கள் எடுத்துச் செல்லும் பொருள்கள் காசியாத்திரைக்கு ஐம்பதுபேர் கொண்ட ஒரு குழு சேகரிக்கும் பொருள்களைவிடக் கூடுதலாகும்.

சிங்கக் கூட்டங்கள் நடுவழியில் இரயில் போக்குவரத்தை நிறுத்திவிடுவது அன்றாட நிகழ்ச்சி.

'ஈஸ்ட் ஆப்பிரிக்கன் ஸ்டாண்டர்டு' என்னும் நாளிதழில் பின்வரும் செய்தித் தலைப்புக்களைக் காணலாம்;

**ஆகாய விமான நிலையத்தருகே சிங்கங்கள்.**

**சைக்கிள் ஓட்டியவனைச் சிங்கம் துரத்தியது.**

**ஓடும் காரில் ஒரு சிங்கம் ஏறிக்கொண்டது.**

**நைரோபி கடைத் தெருக்களில் ஒரு பெண் சிங்கம் திரிகிறது.**

# உகண்டா

ஆப்பிரிக்க நாடாக இருந்தாலும், பல ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து வேறுபட்டது உகண்டா.

பல துறைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது இந்த நாடு. வெள்ளையர், கறுப்பர் போன்ற சிக்கல்கள் இங்கு இல்லை. இயற்கை வளத்திலும் எழிலிலும் உகண்டா கேரளத்தைப் போன்றது. ஏரிகளும் நீர் நிலைகளும் ஏராளமாக உள்ளன. அவற்றின் பரப்பே கேரள மாநிலத்தின் பரப்பளவுக்கு இருக்கிறது.

அண்டை நாடுகளான டான்ஜேனியா, கீன்யா இரண்டையும்விட உகண்டா பரப்பளவில் சிறியது. ஆயினும் இது நிகழ்காலச் செல்வத்திலும் பழங்காலப் பெருமையிலும் அந்த நாடுகளை விஞ்சியிருக்கிறது.

**வளம்:** உகண்டாவுக்குக் கடற்கரை கிடையாது. சுற்றியுள்ள நாடுகளின் வாயிலாகத்தான் வெளியுலகத் தொடர்பு கொள்ள வேண்டும்.

இந்நாட்டின் மலைகளில் பெரும்பகுதி 3500 அடிக்கும் 4500 அடிக்கும் இடைப்பட்டது. அவற்றினூடே பள்ளத்தாக்குகளும் நிறைந்த வருவாய் தரும் நிலங்களும் உள்ளன. இதனால் உகண்டா உழவர்கள் ஆப்பிரிக்காவிலேயே செல்வர்களாக விளங்குகின்றனர்.

இந்த நாட்டின் சிறப்பான உற்பத்திப் பொருள்கள் காப்பியும் பருத்தியும்.

மேற்கண்ட இரு பொருள்களிலும் வருவாய் கிடைப்பதால் புவியியல் பொருள்களைத் தோண்டுவதில்

இதுவரை இந்நாட்டினர் போதிய அளவு ஆர்வம் காட்டவில்லை. செப்பு, இரும்புத் தாது, கோபால்ட், லைம் ஸ்டோன், பாஸ்பேட், ஈயம், உல்ப்ராம், பெரில் ஆகிய பொருள்களுள்ள சுரங்கங்கள் உகண்டாவில் மிகுதி; இப் பொருள்கள் ஏற்றுமதிக்கு ஏற்றவை.

**வேளாண்மை:** உகண்டாவில் சராசரி மழை ஓராண்டுக்கு 50 அங்குலம். இது கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்யும் மழைக்குச் சமமாகும். இதனால் ஆப்பிரிக்காவிலேயே இந்த நாட்டிலுள்ள வேளாண்மைப் பண்ணைகள் தான் செழித்தும் கொழித்தும் காணப்படுகின்றன.

நாட்டின் பெரும் பகுதியில், நீலகிரி மாவட்டத்துக் கூனூரில் இருப்பதைப் போன்ற பருவநிலை நிலவுகிறது. கூடுதலான வெப்பம் 75 டிகிரி.

மலைகளில் மிக உயரமான இடம் 17,000 அடி. தேவையான அளவு காடுகளும் பல பெரிய ஏரிகளும் உள்ளன. விக்டோரியா ஏரியின் அகலம் 200 மைல். பனியும் குளிரும் நிறைந்த பகுதிகளும் உள்ளன.

இந்த நாட்டிற்குத் தேவையான நெல், சோளம், சர்க்கரைவள்ளி, மணிலாக்கடலை, பருப்பு வகைகள், வாழை ஆகியவை இங்கேயே உற்பத்தியாகின்றன.

புகையிலையைப் பயிரிடுவதில் ஆப்பிரிக்கர் சிறந்து விளங்குகிறார்கள். கரும்பு பயிரிடுபவர் பெரும்பாலும் இந்தியரே. இந்த நாட்டில் ஏற்பட்ட முதல் சர்க்கரை ஆலை நாஞ்சி காளிதாஸ் மேட்டா என்பவரால் 1923ல் தொடங்கப் பெற்றது. இப்போது பல ஆலைகள் உள்ளன. ஆனால் ஏற்றுமதி செய்யும் நிலைக்கு, அளவிலும் தரத்திலும் உயர்ந்திருக்கும் இரு சர்க்கரை ஆலைகளும் இந்தியரால் நடத்தப்படுபவையே.

தேயிலையும் இலவம் பஞ்சும் பெரும்பாலும் வெள்ளைக்காரர்களாலேயே பயிரிடப் படுகின்றன. குறிப்பிட்ட சில இடங்களில் தேயிலைத் தோட்டங்கள் விரிவடைய வாய்ப்பு இருக்கிறது. காப்பி உற்பத்தியில் பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளில் உகண்டா தான் முதலிடம் பெற்றிருக்கிறது. 1950 க்கு பிறகு, காப்பித் தோட்டங்களை-மைசூர் மாநிலத்துக் குடகுப் பகுதியில் போல-வெள்ளைக்காரர்கள் விற்றுவிட்டனர். உகண்டாவில் உள்ள காப்பித் தோட்டங்கள் ஆப்பிரிக்கருக்கும் இந்தியருக்கும் கைமாறியுள்ளன.

பருத்தியைப் பயிரிடுவோர் ஆப்பிரிக்கரே ஆவர். பருத்தி அறைக்கும் இயத்திரத் தொழிற்சாலைகள் இருநூறில், பாதிக்கு மேற்பட்டவை இந்தியருக்கே சொந்தமாக உள்ளன. பருத்தி ஏற்றுமதித் தொழிலும் இந்தியர் ஆதிக்கத்திலேயே இருந்து வருகிறது. உகண்டாவில் விளையும் பருத்தியில் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு இந்தியாவுக்கு வருகிறது.

## பிற தொழில்கள்

சிறு அளவில் பொறியியல் தொழிற்சாலைகளும் மூன்றொட்டுப் பலகை, சோப்பு, செங்கல், ஓடு ஆகியவை செய்யும் தொழிற்சாலைகளும் உள்ளன.

செப்பு உற்பத்தியில் பெரும் பகுதி அரசினரின் குழுவால் நடைபெறுகிறது. சிமிண்டு, எனாமல் பொருள்கள், பெரிய உணவு விடுதிகளை நடத்துதல் ஆகிய தொழில்களில் உகண்டா அரசு முதலீடு செய்திருக்கிறது.

## போக்குவரத்து

கிழக்கு ஆப்பிரிக்க இரயில்வே கீன்யாவிலும் அண்டை நாடுகளிலும் இயங்குகிறது.

இந்த நாட்டில் நீர்வழிப் போக்கு வரத்துத்தான் பொருளாதாரத்தின் அச்சாணியாக மிளிர்கிறது. இந்த நாட்டுக்குப் பயன்படும் மொம்பாசா துறை முகம், உகண்டாவின் தலைநகரிலிருந்து 900 மைல் தொலைவில் இருக்கிறது. ஏரிகளின் வாயிலாகச் சிறு கப்பல் போக்கு வரத்து வளர்ச்சியடைந்திருக்கிறது. தலைநகரான என்டப்பியில் பெரியதொரு விமான நிலையம் கட்டப்பட்டிருக்கிறது.

**கல்விநிலை**

உகண்டாவில் நடுத்தர மக்கள் மிகுதியாக உள்ளனர். ஆப்பிரிக்காவிலேயே உகண்டாவில்தான் அறிவாளிகள் மிகுதி. உணர்ச்சி வயப்படாமலும் தங்கள் உரிமைகளை விட்டுக்கொடுக்காமலும் இருப்பது உகண்டா மக்களின் சிறப்பு.

அரசியல் அலைகளில் சிக்கிக்கொள்ளாமலும் ஐரோப்பியருக்கு அடிபணிந்துவிடாமலும், இந்தியர் களுடன் அளவோடு உறவு வைத்துக்கொண்டும் இந்த நாட்டின் தலைவரான ஒபோட்டே உகண்டா அரசை நடத்திச் செல்கிறார்.

உகண்டாவில் உள்ள மக்கேரேரே பல்கலைக் கழகம் ஆப்பிரிக்காவிலேயே சிறந்த உயர் கல்வி நிலையங்களுள் ஒன்றாகும்.

**பரப்பளவும் மக்கள் தொகையும்**

இந்நாட்டின் பரப்பளவு 91,134 சதுரமைல். இது தமிழ் நாட்டைப் போல் இரண்டு பங்காகும்.

1968இல் இந்நாட்டில் வாழும் மக்கள் ஏறத்தாழ 70 லட்சம் பேராவர். ஐரோப்பியர் தொகை 11,600

இந்தியர், பாக்கிஸ்தானியர் 78,000. ஏனைய வெளிநாட்டார் 4,600.

**அமைப்பும் அரசியல் பிரிவுகளும்**

உகண்டா, கிழக்கு ஆப்பிரிக்காவின் நெஞ்சமாக விளங்குகிறது. சூடான், பெல்ஜியக் காங்கோ, ருவாண்டா, உருண்டி, டான்ஜேனியா, கீன்யா ஆகிய நாடுகள் உகாண்டாவைச் சூழ்ந்துள்ளன.

இந்நாட்டின் நலைநகரம் என்டப்பி. அங்கிருந்து 22 மைலில் உள்ள கம்பாலா இந்த நாட்டின் பெரிய நகரம். அது ஏழு மலைகள்மீது அமைந்தது. மலை உச்சியில் ஒரு மசூதி இருக்கிறது.

நைல் ஆறு தோன்றும் இடத்தில் உள்ள ஜிஞ்சா என்னும் சிறு நகரம், தலைக்காவிரியைப் போன்று புனிதமான இடமாகக் கருதப்படுகிறது.

உகண்டாவில் வலுவான மத்திய அரசு உள்ளது. நான்கு மாநிலங்கள் உள்ளன. இவற்றின் உரிமைகள் மிகச் சிலவே. புகண்டா, அங்கோலா, டோரோ, புன்யோரோ என்பன மாநிலங்களின் பெயர்கள்.

புகண்டா மாநிலம் எல்லா வகையாலும் முக்கியமான மாநிலமாகும். இது விக்டோரியா ஏரியின் வடகோடியில் உள்ளது. உகண்டாவின் நிலப் பரப்பில் இம் மாநிலத்தின் பரப்பளவு கால் பங்காகும். உகண்டா காப்பியில் 90% இம்மாநிலத்திலேயே விளைகிறது, படித்தவர்களும் இங்குதான் மிகுதியாக இருக்கின்றனர். இம்மாநிலமெங்கும் கிறித்தவப் பாதிரிமார் பரவியுள்ளனர். ஆங்கிலேயர் ஆட்சியில் இம் மாநிலம் செல்லப் பிள்ளையாக வளர்க்கப் பெற்றது.

1900ஆம் ஆண்டில் புன்யோரோ மாநிலத்தைச் சேர்ந்த ஆறு மாவட்டங்களைப் புகண்டா மாநிலம் சேர்த்துக் கொண்டது. அக்காலத்திலிருந்து இந்த இரண்டு மாநிலங்களுக்குமிடையே உட்பூசல் வளர்ந்திருக்கிறது. 1962இல் ஒரு குழு இந்தச் சிக்கலைப் பற்றி ஆராய்ந்து இரண்டு மாவட்டங்களை மட்டும் திருப்பிக் கொடுத்து விடும்படி பரிந்துரைத்தது.

## ஆப்பிரிக்கர்

ஆப்பிரிக்கரில் பல இனத்தவர் உள்ளனர். பழக்க வழக்கம், நாகரிகம், செல்வம், கருத்துக்கள் எல்லாம் இனத்துக்கினம் மாறுபடுகின்றன.

பகண்டா என்ற இனத்தவர் பத்து லட்சத்துக்கு மேற்பட்டவர் உள்ளனர். ஆற்றலாலும் அறிவாலும் இவர்கள் முன்னேறி வருகின்றனர். இவர்கள் உகண்டாவின் வடபகுதியில் வாழ்கிறார்கள்.

பாண்டு, நியோலிக், ட்டசோ, லாங்கோ, அச்சோலி, பசோகா, பன்யோரோ, பட்டோரோ என்ற இனத்தவரும் உள்ளனர்.

திருமணமானதும் மணமகன் தன் மனைவியின் தந்தை வீட்டில் வாழ்வதும் திருமணத்தின்போது பெண்களுக்கு ஆடு, மாடுகளை அன்பளிப்பதும் வழக்கம். இவ் வழக்கங்கள் இப்போது மாறி வருகின்றன. நாட்டுப்புறங்களிலுள்ள மக்கள் ஓலையால் வெய்யப்பட்ட மண் குடிசைகளில் வாழ்ந்து வாழைத் தோட்டங்கள் பயிரிட்டும் பாய்மிடைந்தும் வாழ்க்கை நடத்துகின்றனர்.

பெண்கள் மலையாள முண்டு போன்ற உடை உடுத்துகின்றனர். உடம்பின் மேற்பகுதியைத் திறந்த

நிலையிலேயே விட்டுவிடுகின்றனர். மூக்குத்தி அணிகின்றனர்.

கல்தச்சு வேலை, அழகிய மர வேலைப்பாடுகள், இசை, நடனம் ஆகிய வற்றில் உகண்டா ஆப்பிரிக்கருக்கு ஈடுபாடுண்டு.

உகண்டா ஆப்பிரிக்கரிடம் மொத்தம் ஆறு மொழிகள் வழங்கி வருகின்றன. ஆப்பிரிக்க மக்கள் பேசும் முக்கியமான நாற்பது மொழிகளை ஒன்று படுத்தும் இயக்கம் தோன்றியுள்ளது.

படித்தவர்களிடையே ஆங்கில மொழியின் செல்வாக்கு நாளும் பெருகி வருகிறது. உகண்டா ஆப்பிரிக்கர் வண்ணக் குருவிகளையும் வகைவகையான குரங்குகளையும் வளர்க்கிறார்கள். 30,000 யானைகளும் நூறாயிரம் எருமைகளும் உகண்டாவில் உள்ளன. இவற்றை வேட்டையாடுவதில் இவர்கள் ஆர்வமாய் உள்ளனர்.

பழம் பெருமை இவர்களுக்குண்டு. புதிய நாகரிகமும் உலகத் தொடர்பும் மேலை நாட்டுக் கல்வியும் 1875 முதல் விரிவடைந்துள்ள கிறித்தவ இயக்கத்தாலும் அதன் பிறகு ஏற்பட்ட ஆங்கில ஆட்சியாலும் ஆப்பிரிக்கரிடம் வேரூன்றி விட்டன.

**முஸ்லிம்கள்**

உகண்டாவில் வாழும் முஸ்லிம்களுள் இஸ்மாயிலி கோஜாக்கள், போராக்கள் என்ற இரு பிரிவினர் உள்ளனர். இவர்கள் அனைவரும் வியாபாரிகளாக உள்ளனர். இவர்களுள் சிலர் செல்வத்தின் ஏணிப் படியை அடைந்துள்ளனர்.

இஸ்மாயிலி கோஜாக்கள், முகமது நபியின் மகள் வழித் தோன்றலான ஆகாக்கான் என்னும் புகழ்

பெற்ற கோடீசுவரரைத் தங்கள் மதத் தலைவராகவும் வழிபடு கடவுளாகவும் கொண்டுள்ளனர். இந்த இனத்தவர் அவருக்குக் கொடுக்கும் காணிக்கை திருப் பதிக் கோவில் உண்டியல் தொகை அளவினது.

உகண்டாவில் இஸ்மாயிலிக் கோஜாக்கள் 10,000 பேர் உள்ளனர். ஆகாக்கான் இந்த நாட்டில் பள்ளிக் கூடங்களும் மருத்துவ மனைகளும் நிறுவியுள்ளார். உகண்டாவில் அவர் ஒரு பேங்கு ஏற்படுத்தித்தொழிற் சாலைகளுக்கும் வணிக நிலையங்களுக்கும் வியாபாரி களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் 3% வட்டிக்குக் கடன் கொடுத்திருக்கிறார். இதனால் இஸ்மாயிலிகளின் மீது வெறுப்பான சூழ்நிலை இந்த நாட்டில் இல்லை.

**இந்தியர்**

இந்தியரில் இந்து, பார்சி, சீக்கிய மதத்தினரும் உள்ளனர். இரயில்வே தொழிலாளராகவும் அரசு அலுவலகங்களில் அலுவலராயும் எழுத்தராயும் தொழிற்சாலைகளில் முதலாளிகளாயும் தொழில் நுட்பம் தெரிந்த ஊழியராயும் வியாபாரிகளாயும் காண்ட்ராக்ட் வேலைகளில் ஈடுபட்டவராயும் இங்குள்ள இந்தியர் பல்வேறு வகையினராவர்.

இப்போது உகண்டாவிலுள்ள இந்தியர் அனைவரும் உகண்டாவிலேயே பிறந்தவர்கள் ஆவர். அங்கேயே படித்தவர்கள். இளமை முதல் ஆப்பிரிக்கரை நண்பர்க ளாகப் பெற்றவர்கள். சிறு வயதிலிருந்தே செல்வத்தில் திளைத்தவர்கள். கிழக்கு ஆப்பிரிக்க மக்களின் நாட்டு உணர்ச்சியையும் அப்பகுதியின் விடுதலை வரலாற்றை யும் அறிந்தவர்கள். அவற்றில் ஓரளவு பங்கு கொண்ட வர்கள்; பெரும்பாலோர் உகண்டா நாட்டின் குடி யுரிமை பெற்றவர்கள்.)

# தங்கனிகா

ஆப்பிரிக்கா நாள்தோறும் மாறி வருகிறது. அரசியல் நிலே, செல்வநிலே, மக்களின் கருத்துக்கள்-யாவும் மாறி வருகின்றன.

பெயர்களும் அடையாளம் தெரியாதபடி மாறிவிட்டன. தனிப்பட்டவர்களின் பெயர்கள், பூங்காக்களின் பெயர்கள், சாலேகளின் பெயர்கள் மட்டுமின்றி நாடுகளின் பெயர்களும் மாறிவிட்டன.

இதோ சில பழைய பெயர்களேயும் புதிய பெயர்களேயும் தருவோம்.

நியாசாலந்து—மலாவே

வடரொடீஷியா—ஜாம்பியா (ஜம்பேசி ஆற்றின் பெயரால் ஏற்பட்டது)

தென் ரொடீசியா—ரொடீசியா

மொசாம்பிகே—மோனுமொடாப்பா

இவ்வாறு தங்கனிகாவும் ஜான்சிபாரும் இணேந்து, டான்ஜேனியா என்ற பெயர் புதிய நாட்டுக்கு வழங்கப்பெற்றது.

பரப்பளவு, வரலாற்றுச் சிறப்பு, இன்றைய அரசியல் பெருமை ஆகியவற்ருல் தங்கனிகா குறிப்பிடத்தக்க ஒரு நாடாக விளங்குகிறது.

**அமைப்பு**

கிழக்கு ஆப்பிரிக்காவின் கடற்கரையை அடுத்து இந்த நாடு உள்ளது. இதன் பரப்பு 3,61,800 சதுர

மைல். தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், மைசூர், மகாராஷ்டிரம், ஒரிசா ஆகிய மாநிலங்களின் பரப்பளவைக் கூட்டினால் தங்கனிகாவின் பரப்பளவிற்குச் சமமாக இருக்கும்.

எகிப்து, எத்தியோப்யோ, நைஜீரியா ஆகிய மூன்று நாடுகள் மட்டுமே, ஆப்பிரிக்க நாடுகளுள் தங்கனிகாவைவிடப் பரப்பில் கூடுதலாக உள்ளன.

தங்கனிகாவின் பரப்பில் 20,650 சதுர மைல் நீர்நிலைகளின் பரப்பாகும். நான்கு பெரிய ஏரிகள் அந்நாட்டுக்குள் இருக்கின்றன. இவற்றின் பரப்பு கேரள மாநிலத்தின் பரப்பளவினும் மிகுதி.

4,350 சதுர மைல் அளவுக்குச் சதுப்பு நிலங்கள் உள்ளன.

இந்நாட்டின் மிகக் கூடுதலான நீளம் ஏறத்தாழ 750 மைல். அகலமும் அதே அளவு. கடற்கரையின் நீளம் 550 மைல்.

வடக்கே உகண்டா, கீன்யா. கிழக்கே இந்தியப் பெருங்கடல், தெற்கே மொசாம்பிகா, நியாசா ஏரி, ரொடீசியா, நயாசாலந்து ஐக்கியம், தென் மேற்கே தங்கனிகா ஏரி, மேற்கே ருவாண்டா, உருண்டி இவற்றிற்கு நடுவே தங்கனிகா அமைந்திருக்கிறது.

உயர்ந்த மலைகளும் அடர்ந்த காடுகளும் உள்ளன. வற்றுத ஆறுகள் இங்கு கிடையாது. நவம்பர், டிசம்பரில்தொடங்கி ஏப்ரல் வரை மழை பெய்கிறது. அந்த நாளில் எங்கு பார்த்தாலும் ஆறுகளாக உள்ளன. அவற்றைப் பார்க்கும்போது அடக்க முடியாத அகன்ற ஆறுகளோ என்று தோன்றும்.

இந்நாட்டின் மிக உயர்ந்த மலை கிளிமஞ்சரோ. இதன் உயரம் 19,340 அடி. ஆப்பிரிக்க மலைகளுள் இதுதான் உயர்ந்தது. எவரெஸ்ட் சிகரம் 29,000 அடி உயரம் உடையது.

**மக்கள்**

தங்கனிகாவின் மக்கள் தொகை ஏறத்தாழ ஒரு கோடி. ஆண்டுதோறும் இந்தியாவின் மக்கள் தொகை ஒரு கோடி கூடுதலாகி வருகிறது. ஆனால் இந்தியாவின் பரப்பு தங்கனிகாவின் பரப்பைப்போல் மூன்று பங்குதான்.

பலவகையான மக்கள் தங்கனிகாவில் வாழ்கின்றனர். வேளாண்மையில் ஆப்பிரிக்கரும் பெருந் தொழில்களிலும் அரசாங்க அலுவல்களிலும் வெள்ளைக்காரரும், வாணிகத்திலும் சிறு வேலைகளிலும் இந்தியரும் ஈடுபட்டிருக்கின்றனர்.

**ஆப்பிரிக்கர்**

தங்கனிகாவில் ஆப்பிரிக்கர் இனங்கள் 120, ஒவ்வொரு இனமும் சிறுசிறு கூட்டமாக இருக்கிறது. எந்த இனத்தவரும் பெரும் தொகையினராக இல்லை. இவர்கள் அனைவரும் அமட்டிக், நீக்ரோ என்ற இரு வகையினரின் இரத்தக்கலப்பால் ஏற்பட்ட பாண்டூ இனத்தவர் என்று சொல்லுகிறார்கள். இவர்களிடம் இனக்கட்டுப்பாடு தளர்ந்து விட்டது. சிற்றூர்களினின்றும் நகரங்களை நோக்கி, ஆண்டு தோறும் பெருந்திரளான மக்கள் சென்று நகரங்களிலேயே நிலைத்து விடுகின்றனர்.

சில ஆண்டுகளுக்குமுன் டங்கா, மவான்ஜா, டபோரா, டோடோமா போன்ற ஆயிரக்கணக்கான

சிற்றூர்களில் வாழ்ந்தவர்கள் இப்போது டார்எஸ் சலாம், வாங்கிங்–ஊம்பே, மகம்பா, மோரோகோரோ போன்ற நகரங்களில் வாழ்கின்றனர்.

ஆடு, மாடு வளர்ப்பதுடன் தங்கள் தேவைக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் பருத்தியையும் காப்பியையும் ஆப்பிரிக்கர் பயிரிடுகிறார்கள்.

அவர்களுக்குப் பேய்பிசாசு முதலியவற்றில் அளவு கடந்த நம்பிக்கை உண்டு,

கடலோரத்தில் வாழும் மக்கள் நெடுங்காலமாக இஸ்லாம் மதத்தைப் பின்பற்றி வருகின்றனர். கிறித்தவ மிசனரிமாரின் விடாமுயற்சியால், 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து உள்நாட்டுப் பகுதிகளிலும் கிறித்தவ சமயம் பரவியிருக்கிறது.

ஆப்பிரிக்கரின் மொழி சுவாகிலி. இரண்டு உயிர் எழுத்துக்கள் சேர்ந்தாற்போல் வந்தால் அவை ஒவ்வொன்றையும் தனித்தனியே உச்சரிக்க வேண்டும் என்பது இந்த மொழியின் மரபு ஆகும்.

இம்மொழியில் சில சொற்களைக் காண்போம்.

| | |
|---|---|
| ஜம்பே | —வணக்கம் |
| ஹபாரி | —எப்படி இருக்கிறீர்கள்? |
| இன்சூரி | —நலமாக இருக்கிறேன். |
| அசன்டே | —மிக்க நன்றி |
| குவாஹெரி | —போய் வருகிறேன். |
| மாயய் | —முட்டை |
| மட்டுண்ட | —வளம் |
| லெட்டே சாய் | —தேனீர் கொண்டுவா |

ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்களைக் குறிக்க மோஜா, எம்பில்லி, ட்டாடு, என்னே, ட்டானோ, சில்ட்டா, சாபா, நானே, டில்சா, குமி என்பர்.

## இந்தியர்

தங்கனிகாவில் வாழும் ஆப்பிரிக்கர் அல்லாதவர்களில் இந்தியரும் பாக்கிஸ்தானியருமே பெரிய கூட்டத்தினர் ஆவர், இன்று சிறு சிறு கடைகள் நடத்தியும், அரசாங்க அலுவலகங்களில் ஊழியம் பார்த்தும், ஏற்றுமதி நிறுவனங்களுக்கும் உள்நாட்டு உற்பத்தியாளருக்குமிடையே தரகராக விளங்கியும் இந்தியர்கள் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்.

பல நூற்றாண்டுகளாக இந்தியாவின் மேற்குக் கரைக்கும் ஆப்பிரிக்காவின் கிழக்குக் கரைக்குப் தொடர்புகள் இருந்து வந்திருக்கின்றன. பல தலைமுறைகளுக்குமுன் 'வாடேபுல்லி' என்போர் தங்கனிகாவைப் படையெடுத்ததாக அந்நாட்டு வரலாறு கூறுகிறது. இவர்கள் பம்பாய்க்கருகே உள்ள ஒரு பகுதியினர் என்பது ஆராய்ச்சியாளர் முடிவு.

15ஆம் நூற்றாண்டில் குஜராத்திலுள்ள காம்பே பகுதியிலிருந்து துணி, கோதுமை, நறுமணப் பொருள்கள் தங்கனிகாவுக்கு வந்தன. இங்கிருந்து தந்தமும் அண்டை நாடுகளிலிருந்து தங்கமும் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டன.

ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியாவும் தங்கனிகாவும் இருந்தபோது இரு நாடுகளுக்குமிடையே மேலும் பல தொடர்புகள் ஏற்பட்டன. இங்கு இரயில் பாதை அமைக்க ஆயிரக்கணக்கான இந்தியர் வரவழைக்கப்பட்டனர். அவர்களுக்கு ஆங்கிலேயர் சோறு போட்டு மாதம் பதினைந்து ரூபாய் சம்பளம் கொடுத்தனர், மூன்றாண்டாவது இருக்க வேண்டுமென்பது ஒப்பந்தம். அதன் பிறகு ஆங்கிலேயர் கப்பல் டிக்கெட் கொடுத்து அவர்களை இந்தியாவுக்கு

அனுப்பிவிடுவர். ஆப்பிரிக்காவிலேயே தங்கிவிட விரும்புபவர்கள் அவ்வாறே தொடர்ந்து அங்கேயே இருக்கலாம்.

இந்த ஏற்பாட்டின்படி 50,000 இந்தியர் கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளுக்கு வந்தார்கள். இவர்களில் சில ஆயிரம் பேர் சிங்கங்களால் தாக்கப்பட்டு உயிரிழந்தார்கள். இன்னும் சில ஆயிரம்பேர் பிளேக், மலேரியா, வயிற்றுப் போக்கு போன்ற நோய்களுக்கு இரையாயினர்.

கிழக்கு ஆப்பிரிக்காவில் சில தொல் மரபினங்களை டக்குவதற்காகப் பிரிட்டிஷார் இந்தியாவில் படை ரட்டி ஜான்சிபார் சுல்தானுக்கு அனுப்பிவைத்தனர்.

இந்திய வணிகர் சிலரும் ஆப்பிரிக்காவில் குடி யறினர். குஜராத்திகள் இங்கு குடியேறித் தோட்டங்களையும் கடைகளையும் உணவு விடுதிகளையும் வாங்கி நடத்தலாயினர்.

வட்டித் தொழிலில் ஈடுபட, பம்பாய்ப் பகுதியிலிருந்து சேட்டுக்கள் இங்கு வந்தனர், தோட்டத் தொழில் நடத்திய ஆங்கிலேயரும் அவர்களிடம் உதவி பெற்றிருப்பதை வின்ஸ்டன்சர்ச்சில் தம் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

**அராபியர்**

மீனவராயும் வணிகராயும் அராபியர் இப்பகுதியில் ஓராயிரம் ஆண்டுகளாக உலாவி வருகின்றனர். அவர்களுடைய மதத்தையும் இங்கு பரப்பியிருக்கிறார்கள். சுவாகிலி மொழியில் அரபுச் சொற்கள் ஏராளமாக இருக்கின்றன.

**ஐரோப்பியர்**

இங்கு ஐரோப்பியர் தொகை மிக மிகக் குறைவு. 1891ல் ஜெர்மானியரும் அதன் பின்னர் பிற ஐரோப்பிய நாட்டினரும் இங்கு வந்தனர். இப்போது இங்கு வாழும் ஐரோப்பியரில் மூன்றில் இரண்டு பங்கினர் ஆங்கிலேயராவர்.

ஐரோப்பியர் தொடர்பால் இங்கு காப்பி, தேயிலை, இரப்பர், புகையிலை, இலவம்பஞ்சு ஆகியவை பயிரிடப்பட்டிருக்கின்றன.

**வரலாறு**

வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட கற்காலச் சின்னங்கள் தங்கனிகாவில் உள்ளன. இருபது லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அடையாளங்களும் காணக் கிடக்கின்றன. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் மலைகளில் தீட்டப்பெற்ற வண்ண ஓவியங்களும் இங்கே உள்ளன. அஜந்தா, எல்லோரா, சித்தன்ன வாசல் ஓவியங்களைவிட, இவை காலத்தால் முந்தியன.

பத்தாம் நூற்றுண்டுக்கும் பதினுரும் நூற்றுண்டுக்கும் இடையே அரேபியா, பெர்சியா ஆகிய நாடுகளிலிருந்து வணிகர் இங்கு வந்து பெரும் பொருள் ஈட்டினர். தோண்டி எடுக்கப்பட்டுள்ள பானைகள் போன்ற பொருள்களிலிருந்து ஆசிய நாடுகளுடன் தொடர்பு இருந்தது என்பது தெரிகிறது.

16, 17 ஆம் நூற்றுண்டுகளில் அடிமை வியாபாரத்தால் ஆப்பிரிக்கரின் இயல்பான வியாபார முறை சீர் குலைந்தது. 19 ஆம் நூற்றுண்டில் கிழக்கு ஆப்பிரிக்காவின் சில பகுதிகளை ஜெர்மானியர் பிடித்துக் கொண்டனர். அவர்களுடைய ஆட்சிமுறையை ஆப்பிரிக்

கரோ, அராபியரோ விரும்பவில்லை. போக்குவரத்து வசதியும் சுரங்க உற்பத்தியும் அவர்கள் காலத்தில் பெருகின.

1918-ல் ஜெர்மனி தோல்வி அடைந்தது. தங்கனிகாவை ஆளும் பொறுப்பைச் சர்வதேசச் சங்கம் ஆங்கிலேயருக்கு வழங்கிற்று. அமைதியான ஆட்சியும் படிப்படியான பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டன, ஆனால் ஆப்பிரிக்கப் பழங்குடி மக்கள் ஒரு நன்மையும் பெறவில்லை. தங்கனிகாவின் ஆட்சியை ஆப்பிரிக்கரிடமே விட்டுவிட வேண்டுமென்று ஐக்கிய நாடுகள் அவை 1946-ல் வற்புறுத்திற்று. ஆப்பிரிக்க மக்களின் நாட்டுணர்ச்சியின் விளைவாக தங்கனிக ஆப்பிரிக்க தேசிய ஐக்கியம் என்ற அரசியல் கட்சி உருவாயிற்று. அரசியல் விடுதலைக்காக அக்கட்சி போராட்டம் நடத்திற்று. 1961-ல் தங்கனிகா சுதந்திர நாடாயிற்று.

**பொருளாதார நிலை**

பொருளாதாரத் துறையில் தங்கனிகா ஒரு குறிப்பிடத்தக்க நாடு. குடி தண்ணீர் அங்கு போதிய அளவு கிடையாது. சிற்றூர்களில் வாழும் மக்கள் கோதுமையையும் சோளத்தையும் பயிரிட்டு விளைந்ததைச் சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறார்கள். விற்பதற்கு அவர்களிடம் உபரியான உற்பத்தி இல்லை. எப்பொருளையும் வாங்குவதற்கு அவர்களிடம் பணம் இல்லை. பணம் என்று ஒரு செலாவணி இருப்பதையும் அவர்கள் அறியார். அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் பொருள்களின் பண்டமாற்றுத்தான்.

இந்நாட்டில் மூன்றில் இரண்டுபகுதி வேளாண்மை செய்ய இயலாத நிலையில் இருக்கிறது. டெஸ்ட்டி

என்னும் ஒருவகைப் பூச்சி வேளாண்மைக்குக் கேடு பயக்கிறது. இந்தப் பூச்சியைப்பற்றி இந்த வரிசையில் வேறொரு நூலில் கூறியுள்ளோம்.

பயிரிடப்படும் பொருள்களின் அடிப்படையில் இந்த நாட்டை மலைப்பகுதி, கடலோரப் பகுதி, சம வெளிப் பகுதி என மூவகைப்படுத்தலாம்.

மலைப்பகுதியில் இலவம்பஞ்சும், தேயிலையும், காப் பியும் பயிரிடப்படுகின்றன. இலவம்பஞ்சு ஏற்றுமதி யில் உலக நாடுகளிலேயே முதலிடம் தங்கனிகாவுக்கு உரியது. இலவம்பஞ்சிலிருந்து கயிறு, நூல்கண்டு, கண்டாரை வியக்கவைக்கும் விலையுயர்ந்த நாற் காலிகளின் உறை தைக்க உதவும் நூல்கள் ஆகியவை செய்யப்பட்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி யாகின்றன.

தேயிலைத் தோட்டங்கள் சிறிய அளவின. அவை ஆப்பிரிக்கருக்கே சொந்தமாக உள்ளன. பருத்தி பயிரிடுவதை ஜெர்மானியர் இந்த நாட்டில் பரப்பி னர். கடலோரப் பகுதிகளில் மாந்தோப்புகளும், தென்னந்தோப்புகளும் இருக்கின்றன.

கடற்கரையிலும் ஏரியிலும் குறிஞ்சி நிலத்து ஓடைகளிலும் மீன்பிடி தொழில் நடைபெறுகிறது. ஏரியில் பிடிக்கப்படும் மீன்கள் பதப்படுத்தி வெளிநாடு களுக்கு அனுப்பப்படுகின்றன.

இந்த நாட்டின் மற்றொரு ஏற்றுமதி பாம்பு. உல கத்திலேயே நஞ்சு மிகுந்த பாம்புகள் தங்கனிகாவில் தான் இருக்கின்றன. ஆராய்ச்சி நிலையங்களுக்கும் உயிரினக் கூடங்களுக்கும் அமெரிக்கர் இந்தப் பாம்பு களை அநியாய விலைக்கு வாங்குகின்றனர்.

சம வெளிகளில் புகையிலையும் அன்னுசியும் கரும்பும் பயிரிடப்படுகின்றன. சர்க்கரைவள்ளி பயிரிடுவதும் வாழை பயிரிடுவதும் அங்குள்ள பிற தொழில்கள் இந்த இரண்டும்தான் பஞ்ச காலத்தில் மக்களைக் காப்பாற்றுகின்றன.

### சுரங்கங்கள்

வயிரம்: 1940-ல் வயிரம் கண்டு பிடிக்கப்பட்டது. அதுமுதல் ஆண்டுதோறும் அதன் உற்பத்தி பெருகி வந்திருக்கிறது. லேக் மாநிலத்திலுள்ள எம்வாடி என்னுமிடத்தில் பெரியதொரு வயிரச் சுரங்கம் இருக்கிறது. இந்தச் சுரங்கத்தில் தங்கனிகா அரசினருக்கும் பங்கு இருக்கிறது. ஆண்டுதோறும் பன்னிரண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள வயிரம் ஏற்றுமதியாகிறது.

தங்கம்: நான்கு இடங்களில் தங்கச் சுரங்கங்கள் உள்ளன. ஓராண்டில் ஏற்றுமதியாகும் தங்கத்தின் மதிப்பு மூன்று கோடி ரூபாய்.

பிற பொருள்கள்: ஈயம், துத்தநாகம், மைகா போன்ற பொருள்களும் உள்ளன.

### வெளிநாட்டுத் தொடர்பு

நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் காப்பித் தோட்டங்களில் புதிதாகக் காப்பிச்செடி பயிரிடவும் ஆங்கிலேயர் தங்கனிகா அரசினருக்கு உதவி வருகின்றனர்.

சிமெண்ட், புகையிலை, மதுவகை, செருப்பு ஆகிய பொருள்களின் உற்பத்தியில் பெரிய வெளிநாட்டுக் குழுக்கள் இயங்குகின்றன.

குதிரை ஏறவும், மீன் பிடிக்கவும், வேட்டையாடவும் நீர்க்கோழிகளைச் சுட்டு மகிழவும் 'சல்பர் பாத்ஸ்'

என்னும் ஒருவகை நீரூற்றுக்களில் நீராடி, பொழுது போக்கவும் வெளிநாட்டார் தங்கனிகாவுக்கு வருகின்றனர்.

**போக்குவரத்து**

பரப்பளவின் காரணமாக தங்கனிகாவில் ஆகாய விமானப் போக்குவரத்து வளர்ச்சியடைவதற்குப் பெரிய வாய்ப்பு இருக்கிறது. வெளிநாட்டுத் தொடர்புடைய விமான நிலையம் டார்எஸ்சலாம் நகரிலும், உள் நாட்டு விமான நிலையங்கள் ஐம்பது இடங்களிலும் உள. உள்நாட்டுப் போக்குவரத்தில் தங்கமும் வயிரமும் தான் விமானத்தில் செல்லுகின்றன. ஆண்டுக்கு 260 ரூபாய் வருவாய் உள்ள மக்கள் எப்படி ஆகாயத்தில் பறப்பார்கள்?

கப்பல் போக்குவரத்து இந்த நாட்டின் அயல் வாணிகத்துக்கு உறுதுணையாக இருக்கிறது. இந்நாட்டின் பெரிய துறைமுகம் தலைநகராகிய டார்எஸ் சலாத்தில் இருக்கிறது. டங்கா, எம்டுவாரா, லின்டி என்பன சிறு துறைமுகங்கள்.

ஏரிகள் வழியாயும் உள் நாட்டில் போக்குவரத்து வசதிகள் பெருகி இருக்கின்றன. லட்சக்கணக்கில் செலவு செய்து ஆங்காங்கு துறைமுகங்கள் அமைத்திருக்கிறார்கள். பலநூறாயிரம் மக்கள் பயணம் செய்யவும் ஏராளமான பொருள்களை அனுப்பவும் படகுகளும் சிறிய கப்பல்களும் இந்தத் துறைமுகங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றன.

இரயில் போக்குவரத்து 1600 மைல்களுக்கு இருந்து வருகிறது. சாலைப் போக்குவரத்தைப் பெருக்கிக் கொள்வதில் தங்கனிகா அடையாளம் தெரியாத அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

**தலைநகர்**

இந்நாட்டின் தலைநகர் டார்எஸ்சலாம். இது இஸ்லாமியரால் கொடுக்கப்பட்ட பெயர். இதன் பொருள், 'அமைதியின் புகலிடம்' என்பது. இம் மதத்தினர் இங்கு எட்டாம் நூற்றுண்டில்தான் வந்தனர். ஆனல் இந்த நகர் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நாகரிகத்தின் தொட்டிலாய் விளங்கிற்று. அழகான கட்டிடங்களும் வணிக நிலையங்களின் மாளிகைகளும் கிழக்கு ஆப்பிரிக்கப் பல்கலைக் கழகமும் ஐந்து கோடி ரூபாய்ச் செலவில் அமைக்கப்பட்ட எண்ணெய்த் தூய்மி (தொழிற்சாலை) யும் இந்நகரில் உள்ளன.

கிழக்கு ஆப்பிரிக்க மக்கள் இந்நகரைச் சுருக்கமாகவும் செல்லமாகவும் டார் என்று குறிப்பிடுகின்றனர்.

**கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளின் ஒன்றியம்**

ஆசிய நாடுகளுக்கிடையே ஆசிய நெடுஞ்சாலை போடப்பட்டு வருவது போல ஆப்பிரிக்காவிலும் சில முயற்சிகள் நடைபெறுகின்றன. எத்தியோப்பியா, கீன்யா ஆகிய இரு நாடுகளையும் சாலை வழியாக இணைக்கவும் டான் ஜெனியாவையும் ஜாம்பியாவையும் ரயில் பாதை போட்டு இணைக்கவும் ஏற்பாடுகள் தொடங்கிவிட்டன,

கிழக்காப்பிரிக்க நாடுகளும் காங்கோவும் சேர்ந்து ஏரிகளையும் ஆகாய விமான நிலையங்களையும் பொதுவாகப் பயன்படுத்த உடன்பட்டுள்ளன.

சூடானின் தலைகராகிய கார்ட்டூம் என்னும் நகரிலுள்ள கடைகளில் சீனுவிலிருந்து தகரத்தில் அடைத்து வரும் பழங்களை விற்கிருர்கள். அண்டையிலுள்ள ஆப்பிரிக்க நாடுகளின் பழத்தோட்டங்களிலிருந்து

அன்ருடம் பழங்களை வாங்கி விற்கலாம் என்ற எண்ணம் தோன்றியிருக்கிறது.

கெய்ரோவிலும் எத்தியோப்பியாவிலும் இலங்கைத் தேயிலை விலையாகிறது. இவ்வாறு இந்தியக் காப்பி ஆஸ்திரேலிய வெண்ணெய் ஆகியவையும் ஆப்பிரிக்கா எங்கும் விலையாகின்றன. இப்பொருள்களெல்லாம் ஆப்பிரிக்காவிலேயே கிடைப்பதால் அவற்றையே ஆதரிக்க வேண்டுமென்ற கருத்துப் பரவிவருகிறது.

உகண்டா காப்பி, மாலாவி புகையிலை, ஜாம்பியா செப்பு ஆகியவற்றிற்கு ஏற்றம் கொடுத்து ஆப்பிரிக்காவின் பொருளாரத், தன்னிறைவுக்கு வழிகோல வேண்டும் என்ற உணர்ச்சி உருவாகிவருகிறது.

கீன்யா, உகண்டா, டான்ஜேனியா மூன்று நாடுகளும் இணைந்தால் பொருளாதாரத் துறைகளில் முன்னேறலாம். பூச்சி ஒழித்தல், நீர் வளத்தைப் பெருக்குதல், பண்டமாற்று, வெளிநாட்டு உதவி பெறுதல் ஆகிய துறைகளில் இந்த நாடுகள் முன்னேற்றம் அடைய ஒன்றுபட்ட முயற்சி தேவைப்படுகிறது.

கிழக்கு ஆப்பிரிக்க ஐக்கியம், ஆப்பிரிக்க நாடுகளின் ஒன்றியம் ஏற்படுவதற்கு வழி கோலும்.

## தங்கனிகா - வரலாறு

| | |
|---|---|
| 14ஆம் நூற்றூண்டு | அராபியர் இந்த நாட்டின் கடற்கரையில் ஆதிக்கம் செலுத்தினர். அடிமை வியாபாரத்திற்கு ஆள் பிடித்தனர். |
| 1497 -98 | போர்த்துக்கீசியரான வாஸ்கோடகாமா இப்பகுதிக்கு வந்தார். |
| 16ஆம் நூற்றூண்டு | போர்த்துக்கீசியர் செல்வாக்குப் பெருகியது. |
| 18ஆம் நூற்றூண்டு | ஐரோப்பாவிலிருந்து கிறித்தவ மிசனரிமார்கள் வந்தார்கள். |
| 1866 | உள்நாட்டுப் பகுதிகளை ஆங்கிலேயர் ஆராய ஆரம்பித்தனர். |
| 1885 | ஜெர்மானியர் தங்கனிகாவைப் பிடித்துக் கொண்டனர். |
| 1905 | உள்நாட்டுக் கலகம். |
| 1914-1918 | உலகப் போர். அதில் ஜெர்மானியர் தோல்வியடைந்தனர். |
| 1920 | சர்வதேசச் சங்கம் தங்கனிகாவை ஆளும் பொறுப்பை ஏற்று, அந்த உரிமையைப் பிரிட்டனுக்கு வழங்கிற்று. பிரிட்டிஷ் ஆட்சியில் தோட்டத் தொழில்களும் சுரங்கத் தொழில்களும் வளர்ச்சியடைந்தன. |
| 1954 | ஜூலியஸ் நியாரரே தலைமையில் டானு என்ற வலுவான அரசியல் கட்சி உருவாயிற்று. |

1961 ஜூலியஸ் நியரரே தலைமையில் தங்கனிகா சுதந்திர நாடாயிற்று.

1962 குடியரசு ஏற்பட்டது; குடியரசின் தலைவராக ஜூலியஸ் நியரரே தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

1964 டான்ஜேனியா என்ற பெயரில் தங்கனிகாவும் ஜான்சிபாரும் இணைந்தன.

1966 பேங்குகள், மா அரைக்கும் ஆலைகள், வேறு சில தொழிற்சாலைகள், ஏற்றுமதி இறக்குமதி, வாணிகம் தேசிய மயமாக்கப்பட்டன. டான்ஜேனியாவை விட்டு வெளியேற வேண்டுமென்ற கருத்து இந்தியருக்கும் ஐரோப்பியர்க்கும் ஏற்பட்டது.

தென் ஆப்பிரிக்காவிலிருந்தும் போர்ச்சுக்கல் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளிலிருந்தும் ஆப்பிரிக்க அகதிகள் டான்ஜேனியாவில் தஞ்சமடைந்தனர்.

## டான்ஜேனியா: சில விவரங்கள்

**பரப்பு:** *3,61,800 சதுர மைல்.*

**மக்கள் தொகை:** *ஏறத்தாழ ஒரு கோடி. (ஐரோப் பியர் 20,000, இந்தியர் ஒரு லட்சம், அராபியர் 75,000)*

**சமயம்:** *மக்களில் மிகப் பெரும்பாலோர்க்கு ஒரு குறிப்பிட்ட மதப்பற்று இல்லை. சமயத்தில் முறை யாக ஈடுபாடுடையவர்களிடம் பரவியுள்ள பெரிய மதம் இஸ்லாம்.*

**ஆட்சி மொழி:** *ஸ்வாஹிலி.*

**தலைநகர்:** *டார் எஸ் சலாம்.*

**துறைமுகங்கள்:** *டார் எஸ்சலாம், டங்கா, விக்டோ ரியா ஏரிக்கரையிலுள்ள மவான்சா.*

**தேசியக் கொடி:** *மூன்று பகுதியாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது. மேலும் கீழும் பச்சைநிறம். நடுவே கறுப்பு. பச்சைக்கும் கறுப்புக்கும், கறுப்புக்கும் பச் சைக்கும் இடையே ஒவ்வொரு மஞ்சள் கோடு.*

**நேரம்:** *சுவாகிலி நேரம் பயன்படுத்தப்படுகிறது. இது காலை 6 முதல் மறுநாட் காலை 6 வரையாகும். உலகெங்கும் இப்போது நேரத்தைக் கணக்கிட நள்ளிரவு முதல் நள்ளிரவு வரை ஒரு நாளாகக் கருது கிறார்கள்.*

*சுவாகிலி நேரம், பழந்தமிழ் முறைப்படி, சூரிய உதயத்திலிருந்து கணக்கிடப்படுகிறது. 6 மணி என்றால் பகல் 12 மணி என்று பொருள்.*

# ருவாண்டா, புருண்டி

உகண்டா, தங்கனிகா. காங்கோ நாடுகளின் எல்லையில் ருவாண்டா, புருண்டி என்னும் இரு சிறு நாடுகள் உள்ளன, இவை ஐக்கிய நாடுகள் அவையினரால், 1962ல் சுதந்தர நாடுகளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

பல தொடர்புகள் இருப்பினும், தனித்தனியே வாழ விரும்புவதாக இந்த நாடுகளின் தலைவர்கள் விடுத்த வேண்டுகோளை ஐ. நா. ஏற்றது.

இந்த நாடுகளில் மூன்று இனத்தவர் வாழ்கின்றனர். மொத்த மக்கள் தொகை 50 லட்சம். வாஹூட்டி என்ற இனத்தார், 42 லட்சம் பேர் உள்ளனர். வா டுட்சி என்ற இனத்தவர் தொகை குறைவு; ஆனால் சொத்துக்களில் பெரும்பகுதி அவர்களின் உரிமையாகவே உள்ளன.

இங்குள்ள மக்கள் வேட்டையாடியும் மண் பானை செய்தும், அம்புகள் செய்தும் பிழைக்கிறார்கள். உலகத்திலேயே இவர்கள் தான் உயரமானவர்கள் என்று கூறப்படுகிறது. ஏழு அடி உயரம் உள்ளவர், சில நூறாயிரம் பேர் ஆவர்.

இந்த நாடுகளும் உயரமானவை. 6,000 அடிவரை உயர்ந்த மலைகள் உள்ளன. நிலா வொளியிலுள்ள கட்டுக்கதை நாடுகள் என்ற அடைமொழி இவ்விரு நாடுகளுக்கும் வழங்கிவருகிறது. 1962க்கு முன் இவை பெல்ஜிய நாட்டு ஆட்சியில் இருந்தன. இங்குள்ள

தொழில்கள் காப்பி பயிரிடுதலும், பனை ச்சை எண்ணெய் எடுப்பதும் எனலாம்.

ருவாண்டா நாடு வடக்கேயும், அந்த நாட்டிற்குத் தெற்கில் புருண்டியும் உள்ளன. ருவாண்டாவில் முடியாட்சியும் புருண்டியில் குடியாட்சியும் நடைபெறுகின்றன. அழகிய வடிவமுள்ள கொம்புகள் இந்த நாடுகளிலிருந்து ஏற்றுமதியாகின்றன.

ருவாண்டாவின் பிரச்சினைகள் பல. மக்கள் நெருக்கம் மிகுதியாக இருக்கிறது. அளவுகடந்து மழை பெய்வதால் மலைச்சரிவு ஏற்பட்டுப் பள்ளத்தாக்குகளும் காடுகளும் அழிந்துவருகின்றன. அதனால் புதிதாகக் காடு வளர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

ருவாண்டாவின் தலைநகர் கிதலி. திடீரென்று இது ஒரு சுதந்தர நாட்டின் தலைநகரமாகிவிட்டது. ஒரு பலசரக்குக் கடைக் கட்டிடத்தில் பெல்ஜியத் தூதரகம் திறக்கப்பட்டது. ஒரு மருந்துக்கடையில் ரிசர்வு பாங்கு அலுவலகம் வைக்கப்பட்டது. அமெரிக்கத் தூதரகத்திற்காக, மாட்டிறைச்சி வணிகன் தன் கடையிடத்தை விட்டுக் கொடுத்தான். ரொட்டிக் கடைக்காரன் ஒருவனின் பேருதவியால், பிரிட்டிஷ் தூதரகம் செயற்படத் தொடங்கிற்று!

---